செயற்பொறியாளர் நீஆஅ, பொபது, நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டக்கோட்டம், வள்ளியூர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை : பெறாி.அ.ஆக்னஸ்ராணி, பி.இ.,
செயற்பொறியாளர், நீஆஅ., பொபது.,

**செயல்முறை ஆணை எண். இ3 /1198 / 2018 / நாள். 07 .11.2020**

பொருள் பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி– காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. சா. இராஜவேல், பணி ஆய்வாளரின் மகன் திரு இரா. சிவக்குமாரன், என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிமேற்கொண்டதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(4)/73958/2007, நாள் 15.02.2016.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் ( கட்டடம்) தலைமைப் பொறியாளர் (கட்டடம் ), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)/20034/2018/நாள் 25.04.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை , மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கடித எண்.அ2/10525/2019, நாள்.19.12.2019.
5. அரசாணை (நிலை) எண்18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை , நாள் 23.01.2020.
6. அரசாணை (3ப) எண்.63 /பொதுப்பணி (பி 1) துறை நாள்18.09.2020.
7. தலைமைப்பொறியாளர், பொபது.,நீஆது., மதுரை மண்டலம் , மதுரை–2 அவர்களின் கடித எண்.அ2/10525/2019(7435)/நாள்.05.10.2020.

//==//==//

பார்வை–1–ல் கண்ட முதன்மை தலைமைப் பொறியாளர் , நீஆது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, திரு. இரா. சிவக்குமாரன், என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, செயற்பொறியாளர், நீஆது., பொபது., மணிமுத்தாறு வடிநில கோட்டம், தேவகோட்டையில் 25.11.2016 முற்பகல் முதல் பணி மேற்கொண்டார். பின்னர் பார்வை–2ல் காணும் செயல்முறை ஆணையின்படி பணியிட மாறுதலில் இக்கோட்டத்தில் 14.05.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு. இரா. சிவக்குமாரன், இளநிலை உதவியாளரின் பணியினை பார்வை–6–ல் கண்ட அரசாணையின்படி அவர் அப்பதவியில் சேர்ந்த நாளான 25.11.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்திடவும், தனியர் பணப்பலன்களை முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் பெற்றிடவும் ஏதுவாக அரசாணை நிலை எண்.18, தொழிலாளர் மற்றும்

வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை , நாள் 23.01.2020–ன்படி தனியருக்கு விலக்களிப்பதோடு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் ) சட்டம் 2016–ன் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை அச்சட்டத்தின் பிரிவு 58–ன் கீழ் அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

இவரது கல்வித் தகுதி, வயது வரம்பு, உடல்நலத் தகுதி ஆகியவைகள் இவர் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படும்போது சரிபார்க்கப்பட்டுள்ளது.

மேலும் தனியருக்கு 25.11.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய அரசாணை வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அந்நாள் முதல் தகுதிகாண் பருவம் தொடங்கியதாக கருதியும் உத்தரவுகள் வழங்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவம் துவங்கிய நாள் முதல் தொடர்ந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் விடுப்பு காலம் நீங்கலாக தகுதிகாண் பருவம் நிறைவு செய்தல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவக்காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலக பயிற்சி நிலையத்தில் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது பணிகள் வரன்முறை செய்த நாள் துவக்கம் முதல் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

07/11/2020

செயற்பொறியாளர் நீஆஅ, பொபது,
நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டக்கோட்டம்,
வள்ளியூர்.

பெறுநர்
திரு.இரா.சிவக்குமாரன்,
இளநிலை உதவியாளர்,
கோட்ட அலுவலகம்.

7/11/2020